**சாட்சிகளின் வாக்குமூலம்**
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 95/2020**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
வாக்குமூலம் – பி.வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிர்மலா தேவி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிருபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. எனது ஆதார் அடையாள அட்டையின் சரிபார்க்கப்பட்ட நகல்.
2. எனது வாக்காளர் அடையாள அட்டையின் சரிபார்க்கப்பட்ட நகல்.
3. எனது Smart Card–ன் சரிபார்க்கப்பட்ட நகல்.
4. பல்லடம் மத்திய கூட்டுறவு வங்கி வழங்கிய சேமிப்பு கணக்கு புத்தகம்
5. 04.12.1992 தேதியிட்ட எனது கணவர் என் பெயருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல்.
6. சுப்புராயக் கவுண்டர் மற்றும் எனது கணவரின் சகோதரர்கள் கையொப்பமிட்டு கொடுத்த ஆட்சேபனையின்மை கடிதம் அசல்.
7. 18.06.2020 தேதியிட்ட பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய சுகாதார பிரிவால் எனது கணவரின் உடல் எரியூட்டப்பட்ட சான்றிதழ் அசல்.

8. 08.07.2020 தேதியிட்ட எனது கணவரின் இறப்பு சான்றிதழ் அசல்

9. 08.04.1980 தேதியிட்ட கோவிந்தசாமி கவுண்டரும் மற்றும் வாதியும் ஏற்படுத்திக் கொண்ட பாக சாசன பத்திரம் சான்றிட்ட நகல்.

10. 29.11.1982 தேதியிட்ட கோவிந்தசாமி பெயரில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல்.

11. 13.07.2006 தேதியிட்ட நானும் எனது கணவரும் சேர்ந்து ராணி முத்துக்குமார் எனபவர்களுக்கு திருமணம் செய்ததற்குண்டான திருமண அழைப்பிதழ் அசல்.

12. 15.12.2022 தேதியிட்ட எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் (2 எண்ணிக்கை)

13. 15.12.2022 தேதியிட்ட எனது பெயரில் உள்ள குடிநீர் வரி ரசீது அசல்

ஆகியவற்றை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.13** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.10.24 18:27:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.